# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:07** **தேதி:05.12.2014**

### FORUM இயங்களின் தேதிகளில் மாற்றம்

அன்பார்ந்த தோழர்களே,

05.12.2014 அன்று கூடிய FORUM கூட்டத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த போராட்ட தேதிகளில் ஒரு சில மாற்றங்களை செய்துள்ளது.

**11.12.2014- கோரிக்கை தினம்கடைபிடிப்பது:-** BSNLஐ புத்தாக்கம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து 11.12.2014 அன்று 'கோரிக்கை தின'த்தை கடைபிடிக்க வேண்டும். அன்று வேலை நிறுத்த அறிவிப்பில் உள்ள கோரிக்கைகளை விளக்கி மதிய உணவு நேர ஆர்ப்பாட்டத்தை அனைத்து கிளைகளிலும் நடத்த வேண்டும்.

**BSNLஐ புத்தாக்கம் செய்ய வேண்டும் எனக்கோரி ஒரு கோடி கையெழுத்துக்களை பெறுவது:-** BSNLஐ புத்தாக்கம் செய்ய வேண்டும் என்கின்ற கோரிக்கைக்கு ஆதரவாக **பொது மக்கள் மத்தியில் ஒரு கோடி கையெழுத்துக்களை பெறுவது** என்கின்ற வரலாற்று சிறப்புமிக்க முடிவினை FORUM எடுத்துள்ளது. 11.12.2014 முதல் "பொதுமக்களை சந்திக்கும் இயக்க"த்தை நடத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பொதுமக்களை சந்திக்கும் இயக்கத்தில் ஒரு கோடி கையெழுத்துக்களை பெற வேண்டும். ஒரு கோடி கையெழுத்துக்களை பெறுவது என்கின்ற இலக்கை அடைவதற்கு ஒவ்வொரு ஊழியரும் குறைந்த பட்சம் 50 கையெழுத்துக்களை பெற வேண்டும். BSNLஐ புத்தாக்கம் செய்வது என்கின்ற கோரிக்கைக்காக மக்களின் பேராதரவை திரட்டுவோம். ஒரு கோடி கையெழுத்துக்களை பெறுவோம்.

**பாராளுமன்றம் நோக்கிய பேரணி:- பாராளுமன்றம் நோக்கிய பேரணி 25.02.2015 அன்று நடத்துவது என FORUM முடிவு செய்துள்ளது.** பொதுமக்களிடம் இருந்து BSNLஐ புத்தாக்கம் செய்வது என்கின்ற கோரிக்கைக்காக பெறப்படும் ஒரு கோடி கையெழுத்துக்களை 25.02.2015 அன்று நடைபெற உள்ள பாராளுமன்றத்தை நோக்கிய பேரணியின் இறுதியில் பாரத பிரதமரிடம் வழங்கப்படும்.

**17.03.2015 முதல் கால வரையற்ற வேலை நிறுத்தம்:-** காலவரையற்ற வேலை நிறுத்ததிற்கான தயாரிப்பு பணிகளுக்கு கால அவகாசம் வழங்கும் வகையில் **03.02.2015 முதல்**

**நடைபெற இருந்த கால வரையற்ற வேலை நிறுத்தத்தை 17.03.2015 முதல் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.**

**அனைத்து மாநிலங்களிலும் பெருந்திரள் கருத்தரங்கம்:-** இந்த காலவரையற்ற வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவதற்கு, 2015, ஜனவரி பிப்ரவரி மாதங்களில் அனைத்து மாநிலங்களிலும் பெருந்திரள் கருத்தரங்கங்களை நடத்த வேண்டும் என FORUM முடிவு செய்துள்ளது.

**நேரடி நியமன ஊழியர்களுக்கு 30 சதவிகித ஓய்வூதிய பலன்கள் கோரிக்கை பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது:-** BSNLன் புத்தாக்கம் தொடர்பான பிரச்சனைகளை மட்டுமே சாதாரணமாக FORUM எடுத்துள்ளது. அது பொருளாதார கோரிக்கைகளை கையிலெடுப்பது இல்லை. 78.2 சதவிகித பஞ்சப்படி இணைப்பு பிரச்சனை மட்டும் அதற்கு விதிவிலக்கு. தற்போதும் ஓய்வூதியதாரருக்கு 78.2 சதவிகித பஞ்சப்படி இணைப்பிற்காக முயற்சி செய்து வருகிறது. மத்திய அமைச்சரவையின் முடிவுகளை BSNL மீறுகின்ற காரணத்தால், BSNLன் நேரடி நியமன ஊழியர்களுக்கு 30 சதவிகித ஓய்வூதிய பலன்கள் தரப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை FORUM கையிலெடுக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு கோரிக்கை வைத்தார். நமது பொது செயலாளரின் இந்த கோரிக்கைகளை FORUM ஏற்றுக் கொண்டு காலவரையற்ற வேலை நிறுத்த கோரிக்கை மனுவில் இணைப்பது என்று முடிவு செய்துள்ளது.

**பெருந்திரள் மக்கள் பங்கேற்ற "தேசிய எதிர்ப்பு தினம்':-** மத்திய அரசாங்கத்தின் மக்கள் விரோத, ஊழியர் விரோத கொள்கைகளுக்கு எதிராக 05.12.2014 அன்று தேசிய எதிர்ப்பு தினத்தை கடைபிடிக்க வேண்டும் அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் அறை கூவல் விட்டன. நாடு முழுவதும் இந்த போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. இன்று பாண்டிச்சேரி உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து கிளைகளிலும், BSNL அலுவலக வாயில்களில் ஆர்ப்பாட்டங்களும், மத்திய தொழிற்சங்கங்கள் நடத்திய பொதுவான இயக்கங்களிலும் நமது ஊழியர்கள் பெருந்திரளாக கலந்துக் கொண்டுள்ளனர். இந்த போராட்டத்தில் பங்கு பெற்ற அனைவருக்கும் தமிழ் மாநில சங்கம் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன், இந்த கோரிக்கைகளுக்காக மேலும் நடைபெற உள்ள அனைத்து போராட்டங்களிலும், பிரமாண்டமாக பங்கேற்போம். மக்கள் விரோத கொள்கைகளை தோற்கடிப்போம்.

BSNLஐ பாதுக்காக்க நடைபெற உள்ள அனைத்து போராட்டங்களிலும் முழுமையாக பங்கேற்போம்!! BSNLஐ பாதுகாப்போம்!!!!

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
**மாநில செயலாளர்.**